# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2085/23 - 2018 අගෝස්තු මස 24 වැනි සිකුරාදා - 2018.08.24

*2085/23 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**புகையிரதக் கட்டளைச் சட்டம்**

*புகையிரதக் கட்டளைச் சட்டத்தின் (200 ஆம் அத்தியாயம்) 3 மற்றும் 4ஏ ஆகிய பிரிவுகளின்படி தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் நிதி அமைச்சரின் இணக்கத்துடன் போக்குவரத்து அமைச்சரினால் இடப்படும் விதிமுறைகள்.*

நிமல் சிறிபால த சில்வா,
போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,
கொழும்பு,
*2018, ஓகத்து 24.*

விதிகள்

*1926 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதிய 7541 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டதுமான பயணிகள் போக்குவரத்து, பொதிகள், குதிரைகள், வாகனங்கள், நாய்கள் கொண்டு செல்லல், பொருட்கள், கால்நடை ஏற்றியிறக்கல் செய்வதற்கான கட்டணங்களும் பொருட்கள் தரப்படுத்தல் சம்பந்தமான விதிகளும் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து மேலும் கீழ்க்காணப்படுமாறு திருத்தம் செய்யப்படுகின்றது :*

"பயணிகள் எனும் தலைப்பின் கீழ்"-

17 ஆவது பிரமாணம் - கட்டணம்



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*உப பந்தி -*

*சகல புகையிரத நிலையங்களிலிருந்தும்/உப புகையிரத நிலையங்களிலிருந்தும் குறிப்பிடப்பட்ட வலய சுற்றுவட்டத்திற்கமைய காட்டப்பட்டுள்ள கட்டணங்கள் கீழ்வருமாறு திருத்தப்படுகின்றன :*

| எந்தவொரு ஆரம்ப புகையிரத/உப புகையிரத நிலையங்களிலிருந்து | பயணிகள் கி. மீ. 1 இற்கான கட்டணம் | | |
|---|---|---|---|
| | I ஆம் வகுப்பு ரூ. சதம் | II ஆம் வகுப்பு ரூ. சதம் | III ஆம் வகுப்பு ரூ. சதம் |
| 1 வலயம் கி. மீ. 01 இலிருந்து கி. மீ. 10 வரை | 4.20 | 2.30 | 1.30 |
| 1 வலயம் கி. மீ. 11 இலிருந்து கி. மீ. 50 வரை | 3.80 | 2.10 | 1.20 |
| 1 வலயம் கி. மீ. 52 இலிருந்து கி. மீ. 100 வரை | 3.30 | 1.80 | 1.00 |
| 1 வலயம் கி. மீ. 101 இலிருந்து கி. மீ. 200 வரை | 2.50 | 1.40 | 0.80 |
| 1 வலயம் கி. மீ. 201 இலிருந்து மேல் | 1.90 | 1.10 | 0.60 |

*புகையிரத நிலையம் இரண்டிற்கிடையில் அல்லது புகையிரத தரிப்பிடம் இரண்டிற்கிடையில் பயணக் கட்டணம் தயாரிக்கும்போது "மூன்றாம் வகுப்பின் கட்டணம் கிட்டிய ஐந்து ரூபாவிற்கு, இரண்டாம் வகுப்பின் கட்டணம் கிட்டிய பத்து ரூபாவிற்கும் முதலாம் வகுப்பின் கட்டணம் கிட்டிய இருபது ரூபாவிற்கும் மட்டந்தட்டப்பட்டுள்ளது.*

*குறைந்த கட்டணம் "முதலாம் வகுப்பு ரூ. 40.00, இரண்டாம் வகுப்பு ரூ. 20.00, மூன்றாம் வகுப்பு ரூ. 10.00" என்று மாற்றம் இல்லாது காணப்படும். பிளட்போம் அனுமதிப்பத்திரம் ரூ. 10.00 ஆக மாற்றம் இல்லாது காணப்படுகின்றது.*

*09-148*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.